# சுவிசேஷப் பிரபல்ய சங்கத்தின் செய்தி

“சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷம் முந்திப் பிரசங்கிக்கப்பட வேண்டும்” மாற்கு 13:10

இன்று நம் சபையில் 150ஆம் ஆண்டின் வாசலில் நாம் நிற்கின்றோம். 150 ஆண்டுகள் முழுவதும் நம்மைத் தாங்கிய கடவுளின் அன்பு மற்றும் அருளுக்காக அவருக்கு நன்றி செலுத்துவது நமது சங்கத்தின் முக்கிய கடமையாகும். அவருடைய தயவால் நாம் பெற்ற பல ஆசீர்வாதங்களுக்காக அவருக்குத் துதிகளை ஏறெடுப்பதுடன் இவ்வறிக்கையை சங்கத்தின் சார்பில் எழுதக் கிடைத்த கிருபைக்காக நான் என் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

இச்சங்கம் 27.10.1964 இல் திருவாளர்கள் D.S.நல்லராஜ் அசரியா சாமுவேல் F.அற்புதராஜ், A.T.பாண்டியன் ஆகியோரின் உதவியுடன் கனம் E.D.சாமுவேல், திரு T.S.தங்கையா, ஆகியோரின் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வப்போது திருச்சபையில் ஊழியம் செய்ய வந்த போதகர்மார்கள் கனம் V.கோயில்பிள்ளை, கனம் C.சாமுவேல், கனம் B.பாலசிங் ஆகியோரின் வழிநடத்தல் மூலம் இச்சங்கம் தொடர்ந்து நடந்து வந்தது. இக்காலகட்டத்தில் திருவாளர் ஜோசப் செல்லையா இச்சங்கத்தில் அதிக ஈடுபாடு செலுத்தி வந்தார். ஜூலை 1983 க்குப் பின் இச்சங்கத்தின் தொழிற்பாடு குறைந்துவிட்டது. ‘புல் உலர்ந்து பூ உதிரும் நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்’ என்ற வாக்குப்படி கனம் ஆபிரகாம் கோயில்பிள்ளை அவர்கள் ஒரு சிலருடன் மீண்டும் இச்சங்கத்தின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்தார். இரண்டு மூன்று பேரின் விசுவாசம் எழுச்சிக்குக் காரணமாக இருந்தது.

1992ம் ஆண்டு கனம் ஐசக் செல்வரத்தினம் தலைமையின் கீழ் திருவாளர் ஜெபமணி ஜெயராஜ், B.C.டேவிட், திருமதி.டெய்சி ஆகியோரின் உதவியுடன் இச்சங்கம் மீண்டும் மிளிரத் தொடங்கியது. எமது சங்கத்தின் நோக்கங்களாக இருக்கும் பணிகள் திருச்சபையின் மக்களை ஆவிக்குரிய வாழ்க்கையில் பலப்படுத்துவது, சமுதாயப் பணிகளில் ஈடுபட்டு உதவி செய்வது என்பனவாகும். ‘எங்களைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எங்களுக்குப் பெலன் உண்டு’ என்ற தேவ வசனத்தின்படி இப்பணிகளை நாம் செய்து வருகின்றோம். இச் சங்கத்தின் மூலமாக நாங்கள் இரவு விழிப்புச் ஜெபம், உபவாசக் கூட்டங்கள், சுவிசேஷ மாநாடு, ஞாயிறு தோறும் மாலையில் இல்லங்களில ஜெபக்கூட்டம் போன்ற ஊழியங்களைச் செய்து வருகிறோம். இத்துடன் ஒவ்வொரு ஞாயிறு காலை ஆராதனையின் பின் 10 மணியளவில் திருச்சபை வளாகத்தில் சாட்சி பகிர்தல் ஆகிய ஆவிக்குரிய காரியங்களில் எம் சபை மக்கள் வழிநடத்தப்படுகிறார்கள்.

1999 ஆம் ஆண்டு ‘கறப்பிஞ்ச’ தோட்ட ஓய்வுநாட் பாடசாலைக்குரிய தேவைகளை எமது சங்கம் சந்தித்ததுடன் அவர்களுக்கு கிறிஸ்மஸ் நற்செய்தி நிகழ்ச்சிகளை நடத்தி ஒரு தினத்தை அவர்களுடன் கழித்து மகிழ்வித்தோம். எமது சங்கத்தினருக்கு மாதம்பே என்ற இடத்திலுள்ள YFC முகாம் நிலையத்தில் குடும்ப முகாம் மூன்று நாட்களாக நடத்தப்பட்டது. ‘உறவுகள்’ என்ற தலைப்பின் கீழ் இம் முகாமுக்குரிய நிகழ்ச்சிகள் இருந்தன. பெரியோர், சிறியோர் யாவரும் இந்நிகழ்ச்சியில் கலந்து தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றனர்.

2002 ஆம் ஆண்டில் எமது காலை ஜெபவேளையில் சேகரிக்கப்பட்ட காணிக்கைகள் தெனியாய ஆலய ஞாயிறு பாடசாலைப் பிள்ளைகளுக்கு கிறிஸ்மஸ் வெகுமதிகள் வாங்க அனுப்பப்பட்டது. AIMS என்ற ஊழியத்தின் வளர்ச்சிக்காக நாம் மாதந்தோறும் பொருளாதார உதவி செய்து வருகின்றோம். மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று

மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்ற வசனத்துக்கு ஏற்ப நமது சங்கத்தினர் இப்பணிகளை மிகத்திறமையாகச் செய்து வருகின்றனர். எமது சபை மக்களோடு இணைந்திருந்து ஊழியம் செய்வதே எமது நோக்கம். எமது சபை வாலிபப் பிள்ளைகளையும், அண்மையிலிருக்கும் ஏனைய சபை வாலிபப் பிள்ளைகளையும் அழைத்து ஒரு நாள் நிகழ்ச்சி நடத்தினோம். மாதம் தோறும் வரும் போயா தினத்தில் உபவாச ஜெபவேளை நடத்தப்படுகின்றது. ஒரு சில தினங்களில் இது ஒரு நாள் நிகழ்ச்சியாகவும் நடந்துள்ளது. வருட முடிவில் எமது சங்கத்தினர் கிறிஸ்மஸ் ஐக்கிய விருந்து நிதழ்ச்சியில் பங்கு பற்றி மகிழ்ந்து களி கூறுகின்றனர்.

“ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்து போவார்கள். அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்” என்ற வசனத்தின்படி எமது சபைக்குச் சேவையாற்ற வந்த கனம் ஜுபிலி பொன்னையா அவர்கள் எமது சங்கத்திற்கு பல ஆலோசனைகள் கூறி சங்கத்தின் நலனில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார். எமது சங்கத்தின் நிகழ்ச்சிகள் யாவற்றிலும் அவர் சமூகமளித்து அனைவரின் ஜெப வாழ்க்கைக்கும் ஒரு தூணாக இருந்து வருகிறார்.

எமது சங்கத்திலிருக்கும் ஜெயராஜ் ஜெயமணி, அன்று சுந்தர்சிங், நெப்போலியன், சிவநாதன் ஆகியோர் ஆத்மீக கொள்கைகள் மூலம் தேவ செய்திகளைக் கூறி எங்கள் விசுவாசத்தைப் பெலப்படுத்தி வருகிறார்கள். மனோகரன் குடும்பத்தினர் பல வருடங்களாக ஊழியத்திற்கு தங்கள் வாகனத்தைக் கொடுத்துதவி வருகின்றனர். வேறு சிலர் தங்களில் காணப்படும் பல்வேறு தாலந்துகளினால் எமது சங்கத்துக்கு உற்சாகமூட்டுகின்றனர். இவர்களுக்காக எமது சங்கத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இக்காரியங்களைச் செய்ய தேவன் அவர்களுக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களுக்காகவும் எனது நன்றிகளைக் கர்த்தருக்குச் செலுத்துகிறேன்.

முடிவாக இந்த ஜுபிலி ஆண்டிற்குள் நுழையும் போது பரிசுத்த பவுல் கூறிய (அப் 26:19) வண்ணம் நமக்கு ஒரு பரம தரிசனம் தேவை. ஏனெனில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற சமுதாயத்திலே நாம் இயேசு கிறிஸ்துவை நோக்கி முன் செல்வது மட்டுமல்ல அவரது பிரதிநிதிகளாகவும் நாம் வாழ வேண்டும் என்பது தான் கடவுளின் விருப்பம். ஆகவே வரும் காலங்களில் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மைக் கடவுளோடும் சமுதாயத்தோடும் இணைக்க கடவுள் கிருபை புரிவாராக.

தேவன் தாமே இச்சங்கத்தைச் சேர்ந்த யாவரையும் ஆசீர்வதிப்பாராக.

திருமதி.எஸ்தர் அசரையா
தலைவி